பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
25 11 2024 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச கூட்டுறவு ஆண்டிற்கான தபால்தலையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.

2. இத்தியாவின் மிக நெருக்கமான நாடாக இத்தாலி திகழ்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. மகாராஷ்டிர மாநிலத்தில் புதிய ஆட்சியமைப்பதற்கான ஆலோசனைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

4. வக்ஃபு வாரியம் உள்ளிட்ட 16 மசோதாக்கள் இன்று தொடங்கும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் விவாதிக்கப்பட உள்ளன.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கேரள அணி - சென்னை அணியை வென்றது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி சர்வதேச கூட்டுறவு அமைப்பின் உலக அளவிலான மாநாட்டினை இன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடங்கி வைக்கிறார்.

130 ஆண்டுகால சர்வதேச கூட்டுறவு அமைப்பின் வரலாற்றில் முதல் முறையாக இந்த மாநாடு இந்தியாவில் நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025க்கான நினைவு தபால்தலையை வெளியிடுகிறார்.

இந்த மாநாட்டில் பூடான் பிரதமர் திரு. **Dasho Tshering Tobgay,** ஃபிஜி நாட்டின் துணைப் பிரதமர் திரு. **Manoa Kami Kamica** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டிற்கு இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம், அமுல் கூட்டுறவு நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன.

1895ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பில் உலகம் முழுவதும் 35 லட்சம் கூட்டுறவு அமைப்புகளில் உள்ள 100 கோடிக்கும் மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

6 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் சர்வதேச அளவிலான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு உறுப்பினர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

'கூட்டுறவே வளர்ச்சிக்கு உறுதுணை' என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

<<<<>>>>

இத்தியாவின் மிக நெருக்கமான நாடாக இத்தாலி திகழ்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இத்தாலி தலைநகர் ரோமில் இந்திய தூதரகத்தின் புதிய வளாகத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், ஐரோப்பிய நாடுகளின் முக்கிய நாடாக இத்தாலி திகழ்வதாகவும், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு பல்வேறு தளங்களில் வளர்ச்சி பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச மற்றும் மண்டல அளவிலான பிரச்சினைகளில் இரு நாடுகளுக்கும் ஒரேமாதிரியான எண்ணங்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய, மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதார வழித்தடம் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் ஐரோப்பிய, ஆசிய நாடுகளுக்கு இடையிலான பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் மாற்றத்தை எதிர்கொள்ளும் என்று அவர் கூறினார்.

ஜி-7 நாடுகளின் மாநாட்டில் சிறப்பு பங்கேற்பாளராக திரு. ஜெய்சங்கர் கலந்துகொள்ள உள்ளார்.

மேலும் அங்கு நடைபெறும் முக்கிய கூட்டம் ஒன்றிலும் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார்.

<<<<>>>>

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

19 அமர்வுகளுடன் 26 நாட்கள் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்படுத்தப்பட்ட நாளான நாளைய தினம் நாடாளுமன்ற அலுவல்கள் எதுவும் நடைபெறாது.

ஆனால் இந்த தினத்தை ஒட்டி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் தேதி அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் 20ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தொடரின்போது வக்ஃபு வாரியம் உள்ளிட்ட 16 முக்கிய மசோதாக்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெறுவதற்காக அனைத்துக்கட்சிக் கூட்டத்தை மத்திய அரசு நேற்று கூட்டியிருந்தது.

இதில் நாடாளுமன்றத்தில் எல்லாவிதமான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு அனைத்துக் கட்சியினருக்கும் வாய்ப்பளிக்கப்படும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஊழல் குற்றசாட்டின் பேரில் இந்திய நிறுவனத்தின் தலைவர் மீது அந்நாட்டின் நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ள விஷயம், மணிப்பூர் கலவரம், வேலையில்லா திண்டாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டிருப்பதாக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பிரமோத் திவாரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைக்கான தேர்தலில் பிஜேபி தலைமையிலான மஹாயுதி கூட்டணி வெற்றி பெற்றுள்ள நிலையில் அங்கு ஆட்சியமைப்பது குறித்து ஆலோசனை நடைபெற்று வருகிறது.

தற்போது முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அரசு வரும் செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைய உள்ள நிலையில் ஏக்நாத் ஷிண்டே சிவசேனா பிரிவு எம்.எல்.ஏக்கள்

கூட்டம், தேசியவாத காங்கிரஸ் அஜித் பவார் பிரிவின் எம்.எல்.ஏக்கள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் தனித்தனியாக நடைபெற்றது.

இதற்கிடையே அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சொக்கலிங்கம், மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பட்டியலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனிடம் நேற்று ஒப்படைத்தார்.

மொத்தமுள்ள 288 தொகுதிகளில் 235 தொகுதிகளை மஹாயுதி கூட்டணி வென்றுள்ளது.

எதிர்க்கட்சிகளின் மஹாவிகாஸ் அகாடி கூட்டணி 49 இடங்களை கைப்பற்றியுள்ளது.

<<<<>>>>

ரயில்வே துறையின் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் பணியாளர்கள் அமைப்பின் தேசிய மாநாட்டை இன்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைக்கிறார்.

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள ரயில்வே மைதானத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

5 ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய அளவிலான 2 நாள் மாநாடு நடைபெறுகிறது.

அரசியல் அமைப்பு சட்டம் ஏற்படுத்தப்பட்ட நாளான 26ஆம் தேதியை ஒட்டி இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளதாக இந்த அமைப்பின் தலைவர் திரு. சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பாலின பாகுபாட்டிற்கு எதிராக மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் அமைச்சகம் சார்பில் பொதுமக்கள், அரசு மற்றும் பல்வேறு அமைப்புகளுடன் சேர்ந்த பிரச்சாரம் இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

ஐக்கிய நாடுகளின் மகளிர் அமைப்பின் உதவியுடன் இந்தப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த பிரச்சாரத்தின்போது 'இப்போது சாக்குபோக்கு சொல்லமுடியாது' என்ற தலைப்பிலான திரைப்படம் வெளியிடப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது.

இந்த தினத்தில் நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்கும் விதத்திலான உறுதியேற்கும் நிகழ்வுகள் நடைபெற உள்ளதாக மகளிர் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்று வரும் வன்முறை காரணமாக அங்குள்ள பள்ளிக் கல்லூரிகளுக்கு மேலும் 2 நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் தேதி ஏற்பட்ட வன்முறை காரணமாக கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

இன்று கல்வி நிலையங்கள் திறக்கப்படுவதாக இருந்த நிலையில் மேலும் 2 நாட்களுக்கு அம்மாநில அரசு விடுமுறை அளித்துள்ளது.

<<<<>>>>

தேசிய மாணவர் படை தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

பள்ளிப் பருவத்திலும், கல்லூரிப் பருவத்திலும் சமூகத்தின்மீது அக்கறை செலுத்தும் விதத்தில் இளம் வயதினரை வழிநடத்த என்.சி.சி. என்ப்படும் தேசிய மாணவர் படை உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 4வது ஞாயிறன்று இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் அங்குள்ள கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

தேசிய மாணவர் படையில் சேர்ந்திருப்பதால் எதிர்காலத்தில் இந்திய பாதுகாப்புத்துறையில் தாம் பணியில் சேர விரும்புவதாக மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கேரள அணி – சென்னை அணியை வென்றது.

கொச்சியில் உள்ள ஜவஹர்லால் நேரு சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கேரள அணி 3-0 என்ற கோல் கணக்கில் சென்னை அணியை தோற்கடித்தது.

இன்று ஹைதராபாதில் நடைபெறும் போட்டியில் ஹைதராபாத் அணி – ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

-------------

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற ப்ரோ கபடி லீக் போட்டியில் புனே அணி – பெங்கால் அணியை 51-34 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

புள்ளிப் பட்டியலில் புனே அணி 3வது இடத்தைப் பிடித்துள்ளது.

மற்றொரு போட்டியில் உத்தரப்பிரதேச அணி – பட்னா அணியை 44-42 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்தது.

இன்று நடைபெறும் 2 போட்டிகளில் புனே அணி – ஜெய்ப்பூர் அணியையும், பெங்களூரு அணி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

------------

இந்தியா - ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

534 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் ஆஸ்திரேலியா அணி தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 12 ரன் எடுத்துள்ளது.

**Perth**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா ஆறு விக்கெட் இழப்பிற்கு 487 ரன் எடுத்திருந்த நிலையில், ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

விராட் கோலி அபாரமாக ஆடி சதம் அடித்தார்.

---------------

சிக்கிம் மாநில தலைநகர் கேங்டாக்கில் 40வது இந்திய சர்வதேச கால்பந்துப் போட்டியில் வடகிழக்கு யுனைடட் கால்பந்து குழு சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்த அணி கேங்டாக் ஹிமாலயன் விளையாட்டுக் குழுவினை டை பிரேக்கர் முறையில் வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**